# TEST NO 1 BASED ON 10TH NEW SOCIAL BOOK (200 QUESTIONS)

(JEBA TNPSC YOUTUBE CHANNEL PAID TEST SERIES **TO JOIN TEST SERIES** **Whats app : 6382770332**)

**1. கூற்று (1): ஆரிய சமாஜம் , ராமகிருஷ்ணா மிஷன் தியோபந்த் இயக்கம் ஆகியவை சமயப் புத்தெழுச்சி மீட்டெடுப்பு இயக்கங்கள்**
**கூற்று (2): கல்கத்தாவில், ஆரிய சமாஜம் சீர்திருத்த இயக்கங்களுக்கு தலைமையேற்றது**

**1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு** **2. இரண்டும் சரி**
**3. இரண்டும் தவறு** **4. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

**2. ஒடுக்கப்பட்டவர்களை மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது சாதியற்ற திராவிடர்கள் என பதிவு செய்யுமாறு வற்புறுத்தியவர்?**
**1. ராஜா ராம் மோகன் ராய்** **2. பெரியார்**
**3. அயோத்தி தாசர்** **4. அன்னிபெசன்ட்**

**3. எந்த ஆண்டில் சுவாமி தயானந்த சரஸ்வதி நிறுவிய ஆரிய சமாஜம் தூய்மைக் கோட்பாடு குறித்த கருத்து முரண்பாட்டால் இரண்டாகப் பிரிந்தது?**
**1. 1890** **2. 1893** **3. 1895** **4. 1885**

**4. மேற்கே உள்ள குஜராத் மாநிலத்திற்கும் கிழக்கே உள்ள அருணாச்சலப் பிரதேசம் மாநிலத்திற்கும் உள்ள தல நேர வேறுபாடு?**
**1. 1 மணி 57 நிமிடம் 12 வினாடிகள்**
**2. 1 மணி 56 நிமிடம் 12 வினாடிகள்**
**3. 2 மணி 55 நிமிடம்12 வினாடிகள்**
**4. 1 மணி 58 நிமிடம் 12 வினாடிகள்**

**5. கூற்று (1): இந்தியா, வடக்கே காஷ்மீரிலுள்ள இந்திராகோல் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை 3214 km நீளத்தை கொண்டுள்ளது**
**கூற்று (2): இந்தியா, மேற்கே குஜராத்திலுள்ள ரான் ஆப் கட்ச் முதல் கிழக்கே அருணாச்சலப் பிரதேசம் வரை 2933 km நீளத்தை கொண்டுள்ளது**

**1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு** **2. கூற்று 2 சரி, கூற்று 1 தவறு**
**3. இரண்டும் தவறு** **4. இரண்டும் சரி**

**6. திபெத் பகுதியில் சாங்போ என்ற பெயரில் அழைக்கப்படும் ஆறு?**
**1. கோதாவரி** **2. பிரம்மபுத்திரா**
**3. கங்கா** **4. யமுனா**

**7. முதலில் குடியுரிமைச் சட்டம் காமன் வெல்த் குடியுரிமையை வழங்கியது பின்னர் எந்த ஆண்டில் இந்த உரிமை நீக்கப்பட்டது?**
**1. 2005** **2. 2002** **3. 2003** **4. 2004**

8. மகாதேவ் கோவிந்த் ரானடே நிறுவிய அமைப்புகளை அது தொடங்கப்பட்ட வருடங்களுடன் பொருத்துக:
A. விதவை மறுமணச் சங்கம் - 1. 1884
B. புனே சர்வஜனிக் சபா - 2. 1861
C. தக்காணக் கல்விக் கழகம் - 3. 1870

1. A-2,B-3,C-1 2. A-3,B-2,C-1 3. A-2,B-1,C-3 4. A-2,B-1,C-3

9. தங்க நாற்கரச் சாலைகள் திட்டம் 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது . இது எந்த நான்கு பெரு நகரங்களை இணைக்கிறது?
1. டெல்லி-சென்னை-பெங்களூர்-மும்பை
2. டெல்லி-கொல்கத்தா-குஜராத்- மும்பை
3. டெல்லி- கொல்கத்தா- சென்னை- மும்பை
4. டெல்லி- குஜராத்- கொல்கத்தா- மும்பை

10. பிரதம அமைச்சரின் கடமைகளை பற்றி குறிப்பிடும் அரசியலமைப்பு விதி?
1. 77 2. 78 3. 79 4. 80

11. கூற்று (1): 1905 ஜூலை 19 இல் வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்டது.
கூற்று (2): 1905 அக்டோபர் 16 இல் வங்காளம் அதிகாரப்பூர்வமாக பிரிவினையானபோது அந்நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு 2. இரண்டும் தவறு
3. இரண்டும் சரி 4. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

12. ஜாலியன் வாலா பாக் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக காந்தியடிகள் எந்த பட்டத்தை திருப்பிக் கொடுத்தார்?
1. வீரத்திருமகன் 2. கெய்சர்-இ-ஹிந்த்
3. நைட்வுட் 4. கெய்சர்-இ-ஹரிஜன்

13. பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்களே உண்மையான பௌத்தர்கள் என வாதிட்டவர்?
1. பெரியார் 2. எம்.சி.ராஜா
3. அயோத்திதாசர் 4. ராஜாஜி

14. இந்தியாவின் மத்திய தீர்க்கரேகையான 82°30′ கிழக்கு தீர்க்கரேகையின் தல நேரம், இந்திய திட்ட நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தீர்க்கரேகை எதன் வழியாக செல்கிறது?
1. ஜெய்ப்பூர் 2. ஜோத்பூர்
3. மிர்சாபூர் 4. ஏதுமில்லை

15. கோவில் நுழைவு நாள் எப்போது அனுசரிக்கப்பட்டது?
1. 1933 ஜனவரி 15 2. 1935 ஜனவரி 15
3. 1933 ஜனவரி 8 4. 1935 ஜனவரி 8

16. காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஏற்பட்ட பூனா ஒப்பந்தத்தின்படி ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 லிருந்து .... ஆக அதிகரிக்கப்பட்டது. மற்றும் மத்திய சட்ட பேரவையில் ...... சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டன?
1. 148,25 2. 148,15 3. 148,50 4. 148,18

17. மூன்றாவது வட்ட மேசை மாநாடு நடைபெற்ற காலம்?
1. 1932 அக்டோபர் 17- 1932 டிசம்பர் 24 வரை
2. 1932 நவம்பர் 17- 1932 டிசம்பர் 24 வரை
3. 1932 நவம்பர் 4- 1932 டிசம்பர் 24 வரை
4. 1932 நவம்பர் 7- 1932 டிசம்பர் 24 வரை

18. அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதை விட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது என கூறியவர்?
1. நேதாஜி 2. திலகர் 3. அன்னிபெசன்ட் 4. அரவிந்த் கோஷ்

19. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A. சென்னை திராவிடர் கழகம் | - | 1. 1878 |
| B. திராவிடர் சங்க தங்கும் விடுதி | - | 2. 1904 |
| C. பாரத மாதா சங்கம் | - | 3. 1916, ஜூன் |
| D. தி- இந்து செய்திதாள் | - | 4. 1912 |

1. A-4,B-3,C-2,D-1 2. A-4,B-2,C-3,D-1
3. A-4,B-3,C-1,D-2 4. A-4,B-2,C-1,D-2

20. ராஜாஜி மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய எந்த வரியை அறிமுகப்படுத்தினார்?
1. சொத்துவரி 2. தொழில் வரி 3. கேலிக்கை வரி 4. விற்பனை வரி

21. ராஜாஜியால் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பெரியார் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றை எங்கு நடத்தினார்?
1. சென்னை 2. மதுரை 3. சேலம் 4. ஈரோடு

22. இரட்டை மலை சீனிவாசன் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
1. 1895 இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார்
2. இவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939 இல் வெளியிடப்பட்டது
இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்
3. இவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகிப் (1926) ,ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் இவர் சிறப்பு செய்யப்பட்டார்
1. 1,2,3 சரி 2. 1,3 சரி 3. 1,2 சரி 4. 2,3 சரி

23. இவற்றுள் அயோத்தி தாசர் பற்றி கூற்றுகளில் சரியானது?
1. பிரம்ம ஞான சபையை நிறுவியர்களில் ஒருவரான H.S ஆல்காட் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக 1898 இல் இலங்கை சென்று அங்கே பௌத்தத்தை தழுவினார்

2. பௌத்த சமய நிலைப்பாட்டிலிருந்து தமிழ் இலக்கியங்களுக்கும் நாட்டார் வழக்காற்றியல் மரபுக்கும் புதிய விளக்கங்கள் கொடுத்த அவர் ஒரு மாற்று வரலாற்றை கட்டமைத்தார்
3. ஒடுக்கப்பட்டவர்களை சாதி பேதமற்ற திராவிடர் என அழைத்தார்
1. 1,2,3 சரி  2. 1,2 சரி  3. 1,3 சரி  4. 2,3 சரி

24. எந்த ஆண்டில் தமிழ்நாடு இந்து வாரிசுரிமை சீர்திருத்த சட்டத்தை தமிழக அரசு அறிமுகம் செய்தது?
1. 1980  2. 1989  3. 1986  4. 1985

25. 1923 இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவர்?
1. எம்.சி.ராஜா  2. டி.எம்.நாயர்  3. வ.உ.சி  4. ம.சிங்காரவேலர்

26. பொருத்துக:
A. சம்பரான் சத்தியாகிரகம் - 1. 1918
B. கேதா சத்தியாகிரகம் - 2. 1917
C. உப்பு சத்தியாகிரகம் - 3. 1906
D. சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது - 4. 1930

1. A-2,B-1,C-4,D-3  2. A-2,B-1,C-3,D-4
3. A-2,B-3,C-1,D-4  4. A-2,B-4,C-3,D-1

27. இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு இந்தியா திரும்பிய காந்தியடிகள் எப்போது கைது செய்யப்பட்டார்?
1. 1932 ஜனவரி 31  2. 1932, ஜனவரி 4
3. 1932 ஜனவரி 14  4. 1931 ஜனவரி 10

28. கூற்று(1): 1920 இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது
கூற்று (2): அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31 இல் பம்பாயில் நடைபெற்றது
1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு  2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி  4. இரண்டும் தவறு

29. தமிழ்நாடு 1076 km நீளமுடன் இந்தியாவின் எத்தனையாவது நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது?
1. 1  2. 2  3. 3  4. 4

30. தமிழ்நாடு உருவான காலகட்டத்தில் எத்தனை மாவட்டங்கள் இருந்தன?
1. 32  2. 12  3. 15  4. 13

31. கூற்று (1): தமிழ்நாட்டின் கிழக்கு கோடியாக கோடியக்கரையும், மேற்கு கோடியாக ஆனைமலையும் அமைந்துள்ளன
கூற்று (2): தமிழ்நாட்டின் வட கோடியாக பழவேற்காடு ஏரியும், தென் கோடியாக குமரி முனையும் அமைந்துள்ளன
1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
4. இரண்டும் தவறு

32. தமிழகத்தின் பரப்பளவு 1,30,058 சதுர கிலோ மீட்டர்களாகும். இது இந்தியப் பரப்பளவில் எத்தனை சதவீதமாகும்?
1. 4
2. 12
3. 15
4. 18

33. பௌத்த மதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தை கட்டமைப்பதற்காக சாக்கிய பௌத்த சங்கம் என்னும் அமைப்பை சென்னையில் அயோத்திதாசர் எந்த ஆண்டில் நிறுவினார்?
1. 1898
2. 1888
3. 1878
4. 1900

34. G. சுப்பிரமணியம் 1891 இல் சுதேசமித்ரன் என்ற பெயரில் தமிழில் ஒரு தேசிய பருவ இதழை தொடங்கினார். அவ்விதழ் எப்போது நாளிதழாக மாறியது?
1. 1891
2. 1895
3. 1898
4. 1899

35. காங்கிரஸ் கட்சி எப்போது யாருடைய தலைமையில் கமிட்டி ஒன்றை அமைத்து அடிப்படை கடமைகள் குறித்து ஆராய பரிந்துரை செய்தது?
1. 1972, சர்தார் ஸ்வரன் சிங்
2. 1975 சர்தார் ஸ்வரன் சிங்
3. 1976 சர்தார் ஸ்வரன் சிங்
4. 1978 சர்தார் ஸ்வரன் சிங்

36. கூற்று (1): அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1947 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் நாள் நடைபெற்றது
கூற்று (2): அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் Dr.சச்சிதானந்த சின்கா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
3. இரண்டும் சரி
4. இரண்டும் தவறு

37. இந்திய அரசியல் அமைப்பு ஆரம்பத்தில் ....... கொண்டது?
1. 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள், 8 அட்டவணைகள்
2. 25 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள், 8 அட்டவணைகள்
3. 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள், 12 அட்டவணைகள்
4. 22 பாகங்கள், 385 சட்டப்பிரிவுகள், 8 அட்டவணைகள்

38. கூற்று (1):எம்.சி.ராஜா ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார்
கூற்று (2): 1930 இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கிய எம்.சி.ராஜா அதன் தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார்
1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

39. பொருத்துக:

A. வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் - 1. 1932
B. ஆகஸ்ட் நன்கொடை - 2. 1940
C. மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல் - 3. 1937
D. ராயல் இந்திய கப்பற்படை புரட்சி - 4. 1946

1. A-1,B-2,C-4,D-3 2. A-1,B-2,C-3,D-4 3. A-2,B-1,C-4,D-3 4.A-2,B-1,C-3,D-4

40. எந்த ஆண்டு இந்திய அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜவஹர்லால் நேருவின் குறிக்கோள் தீர்மானத்தின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது?
1. 1946 ஜனவரி 2 2. 1947 ஜனவரி 2 3. 1948 ஜனவரி 2 4. 1949 ஜனவரி 2

41. அரசியலமைப்பின் சட்டம் ....... அரசியலமைப்பினை சட்ட திருத்தம் செய்வதில் பின்பற்றப்படும் முறைகள் மற்றும் திருத்தம் செய்வதில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பற்றி தெரிவிக்கின்றன?
1. பகுதி XX , 368 ஆவது சட்டப்பிரிவு 2. பகுதி XXI, 368 ஆவது சட்டப்பிரிவு
3. பகுதி XXII, 368 ஆவது சட்டப்பிரிவு 4. பகுதி XXIII, 368 ஆவது சட்டப்பிரிவு

42. மாநில அவசர நிலை (சட்டப்பிரிவு 356) பற்றிய சரியான கூற்று எது?
1. குடியரசு தலைவர் அரசியலமைப்பு சட்டபிரிவு 356 இன் கீழ் மாநில அவசர நிலையை அறிவிப்பார்
2. அதிக பட்சம் அவசர நிலையின் காலம் 3 ஆண்டுகள் இருக்க முடியும்
3. இந்த அவசர நிலை, சட்டபிரிவு 352 இன் படி நடைமுறையில் இருந்தாலும் அல்லது தேர்தல் ஆணையம் சட்டமன்றத் தேர்தலை நடத்த உகந்த சூழல் இல்லை என்று சான்றளித்தாலும் மட்டுமே ஓராண்டைத் தாண்டியும் தொடர முடியும்
1. 1,2,3 சரி 2. 1,2 சரி 3. 1,3 சரி 4. 2,3 சரி

43. 1985 ஆம் ஆண்டு கட்சி தாவல் தடை சட்டத்தின் படி இந்திய அரசியலமைப்பு சட்டம் 10 ஆவது அட்டவணை அடிப்படையில் ஒரு உறுப்பினர் மக்களவை உறுப்பினராக தகுதி பெற்றவரா இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்?
1. குடியரசு தலைவர் 2. துணை குடியரசு தலைவர்
3. பிரதமர் 4. சபாநாயகர்

44. சரியான இணை எது?
1. பட்ஜெட் கூட்டத்தொடர் - பிப்ரவரி- ஏப்ரல்
2. மழைக்கால கூட்டத்தொடர் - ஜூலை – செப்டம்பர்
3. குளிர்கால கூட்டத்தொடர் - நவம்பர்- டிசம்பர்
1. 1,2,3 சரி 2. 2,3 சரி 3. 1,3 சரி 4. 1,2 சரி

45. புதுடெல்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் எப்போது துவங்கப்பட்டது?
1. 1950 ஜனவரி 26 2. 1950 ஜனவரி 30
3. 1950 ஜனவரி 28 4. 1949 ஜனவரி 26

46. கூற்று (1): தமிழகம் பரப்பளவில் இந்தியாவின் பதினோராவது பெரிய மாநிலமாகும்
கூற்று (2): இந்தியா 2018 ஆம் ஆண்டை திணைப் பயிர்களின் தேசிய ஆண்டாக அனுசரித்தது

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
3. இரண்டும் சரி
4. இரண்டும் தவறு

47. அரசியலமைப்பு சட்டப்பிரிவு .... இன் கீழ் ஆளுநர் மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர சட்டத்தை பிறப்பிக்கலாம்?
1. 123 2. 213 3. 215 4. 143

48. சட்டப்பிரிவு ..... இன் படி ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திற்கும், தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை குடியரசு தலைவர் காலத்திற்கேற்றவாறு நியமனம் செய்கிறார்?
1. 213 2. 214 3. 215 4. 216

49. இவர்களில் யார் ஆங்கிலேயருக்கு “கோல்டன் ஃபயர்மேன்” என்ற பட்டத்தை வழங்கி, 1632 இல் அவர்களை தங்கள் ராஜ்ய துறைமுகங்களில் இலவசமாக வர்த்தகம் செய்யவும் அனுமதி வழங்கினார்?
1. கோல்கொண்டாவின் சுல்தான்
2. இரண்டாம் பகதூர்ஷா
3. ராஜாராம் மோகன் ராய்
4. இவர்களில் யாருமில்லை

50. அந்நிய செலாவணி கட்டுப்பாட்டு சட்டம் எந்த ஆண்டில் நடைமுறைக்கு வந்தது?
1. 1973 2. 1974 3. 1975 4. 1999

51. 1947 இல் எத்தனை நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?
1. 117 2. 25 3. 23 4. 50

52. சரியான கூற்று எது?
1. இந்திய அரசியலமைப்பு 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது
2. ஜனவரி 26,1949 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது
3. முகவுரையானது 1976 ஆம் ஆண்டு 42 வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் படி திருத்தப்பட்டது. அதன்படி சமதர்மம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு என்ற மூன்று புதிய சொற்கள் சேர்க்கப்பட்டன்
1. 1,2,3 சரி 2. 1,2 சரி 3. 1,3 சரி 4. 2,3 சரி

53. கூற்று (1): T.R வெங்கட்ராமனார், G.A நடேசன், T.M மாதவராவ் ஆகியோர் சென்னையை சேர்ந்த புகழ்பெற்ற தமிழ் நாட்டு மிதவாதத் தலைவர்கள்
கூற்று (2): G. சுப்பிரமணியம் தனது எழுத்துகளின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்தியா பொருளாதார ரீதியாக ஆங்கிலேயர்களால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகளில் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்கு இணையானவராவார்

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
4. இரண்டும் தவறு

54. முஸ்லீம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவியவர்?
1. யாகுப் ஹசன்
2. சௌகத் அலி
3. மௌலான அபுல் கலாம் ஆசாத்
4. யாருமில்லை

55. யார்,எப்போது தஞ்சாவூர் சங்கீத வித்யா மகாஜன சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார்?
1. 1912, ருக்மணி
2. 1912, ஆபிரகாம் பண்டிதர்
3. 1916,ருக்மணி
4. 1916 ஆபிரகாம் பண்டிதர்

56. இவர்களில் சென்னையை சேர்ந்த புகழ்பெற்ற மிதவாதத் தலைவர்கள்?
1. V.S சீனிவாச சாஸ்திரி
2. P.S சிவசாமி
3. V. கிருஷ்ணசாமி
4. S. சுப்பிரமணியனார்
1. 1,2,3,4 2. 1,2,3 3. 2,3,4 4. 1,3,4

57. கூற்று (1): உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதி
கூற்று (2): 1932, ஜனவரி 26 இல் பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசிய கொடியை ஏற்றினார்

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

58. சரியான கூற்று எது?
1. இந்திய பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளை கையாள்வதற்காக 1927 இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது
2. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்
3. சர்வதேச விவகாரங்களில் நிரந்தர நண்பனும் இல்லை,நிரந்தர பகைவனும் இல்லை, நலன்கள் மட்டுமே நிரந்தரமானவை என்ற வெளியுறவு கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது
1. 1,2,3 சரி 2. 1,2 சரி 3. 2,3 சரி 4. 1,3 சரி

59. தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் எப்போது நிறைவேற்றப்பட்டது?
1. 2014 2. 2015 3. 2013 4. 2012

60. இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ் நாட்டில் தான் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் துவங்கப்பட்டது. அது எப்போது தொடங்கப்பட்டது?
1. நவம்பர் 2015
2. நவம்பர் 2019
3. நவம்பர் 1,2016
4. நவம்பர் 1,2017

61. சென்னைவாசிகள் சங்கம் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
1. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர்
2. வருவாய் துறை அதிகாரிகளால் விவசாயிகள் சித்திரவதைப்படுத்தப்படுவதற்கு எதிராக இவ்வமைப்பு போராட்டம் நடத்தியது. மேலும் இவ்வமைப்பு மேற்கொண்ட முயற்சியினால் சித்திரவதை ஆணையம் நிறுவப்பட்டது

3. இவ்வமைப்பு 1862 க்கு பின்னர் செயலிழந்து இல்லாமலானது

1. 1,2,3 சரி 2. 1,2 சரி 3. 1,3 சரி 4. 2,3 சரி

62. பொருத்துக:

A. பாரத மாதா சங்கம் - 1. 1920 ஏப்ரல் 17
B. தன்னாட்சி இயக்கம் - 2. 1904, நீலகண்ட பிரம்மச்சாரி
C. தென்னிந்திய நல உரிமை சங்கம் - 3. 1916, அன்னிபெசன்ட்
D. கிலாபத் நாள் - 4. 1916, நவம்பர் 20

1. A-3,B-4,C-1,D-2 2. A-2,B-3,C-4,D-1
3. A-4,B-3,C-2,D-1 4. A-1,B-2,C-3,D-4

63. கூற்று (1): அரசு அதிகாரிகளை தேர்வு செய்ய 1926 இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிகட்சி அமைத்தது
கூற்று (2): பிரிட்டிஷ் இந்திய அரசு 1929 இல் பொதுப் பணியாளர் தேர்வாணயத்தை உருவாக்கியது

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு 2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி 4. இரண்டும் தவறு

64. பல பரிமாண வறுமை குறியீடு (MPI) ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு ஆகியவற்றால் எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?

1. 2010 2. 2011 3. 2012 4. 2015

65. இவற்றுள் சென்னை மகாஜன சபையின் கோரிக்கை எது?

1. குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும்
2. லண்டனிலுள்ள இந்திய கவுன்சிலை மூடுவது
3. வரிகளை குறைப்பது
4. இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது

1. 1,2,3,4 சரி 2. 1,2,3 சரி 3. 1,3,4 சரி 4. 2,3,4 சரி

66. பொருத்துக:

A. சுத்தமான பணச்செயல்பாடு - 1. 2016
B. தமிழ் நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் - 2. 1980
C. பணமதிப்பிழப்பு - 3. நவம்பர் 8,2016
D. ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் - 4. ஜனவரி 31,2017

1. A-3,B-4,C-2,D-1 2. A-4,B-2,C-3,D-1
3. A-2,B-3,C-4,D-1 4. A-1,B-2,C-3,D-4

67. தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் சிறு தொழில் அமைப்புகளை எந்த ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் கழகமானது தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது?

1. 1965 2. 1964 3. 1963 4. 1960

68. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில் துறை நிறுவனம்?
1. தமிழ் நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சி கழகம்(TANSIDCO)
2. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (TANSI)
3. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் (TIIC)
4. ஏதுமில்லை

69. கூற்று (1): வ.உ.சி காலியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார்
கூற்று (2): வாஞ்சிநாதன் 1911 ஜூன் 17 இல் நெல்லை மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் சுட்டு கொன்றார்
1. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 சரி கூற்று 2 தவறு

70. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| A. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) | - | 1. 1949 |
| B. தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சி கழகம்(TANSIDCO) | - | 2. 1971 |
| C. தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் (TIDCO) | - | 3. 1970 |
| D. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் (TIIC) | - | 4. 1965 |

1. A-2,B-3,C-4,D-1
2. A-4,B-3,C-2,D-1
3. A-4,B-1,C-2,D-3
4. A-1,B-4,C-3,D-2

71. கூற்று (1): ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ஜனவரி 16,2016
கூற்று (2): ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ஏப்ரல் 5,2016

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

72. நாட்டில் ஏற்றுமதிக்கு இடையுறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?
1. ஜனவரி 2020
2. ஏப்ரல் 2000
3. ஜனவரி 2000
4. மே 2000

73. கூற்று (1): வாணியம்பாடி, கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது
கூற்று (2): தமிழ்நாட்டில் 1919 ஏப்ரல் 17 இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைபிடிக்கப்பட்டது

1.கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

74. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A) அடிப்படை உரிமைகள் | - | 1. பகுதி II விதி 5 – 11 வரை |
| B) குடியுரிமை | - | 2.பகுதி IV A விதி 51 A |
| C) அரசுக்கு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் | - | 3. பகுதி IV விதி 36 -51 வரை |
| D) அடிப்படை கடமைகள் | - | 4. பகுதி III விதி 12 – 35 வரை |

1. A-3,B-1,C-4,D-2
2. A-4,B-1,C-3,D-2
3. A-3,B-4,C-1,D-2
4. A-1,B-3,C-4,D-2

75. இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 352 இன் கீழ் குடியரசுத் தலைவரால் அவசர நிலை அறிவிக்கப்படும் போது இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு ..... இன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது?

1. 19
2. 20
3. 21
4. இவை அனைத்தும்

76. கூற்று (1): இந்திய அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம் என "அடிப்படை கடமைகளை" அம்பேத்கர் விவரிக்கிறார்

கூற்று (2): 2002 ஆம் ஆண்டு மேற்கொண்ட 86 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் படி இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21 A வின் கீழ் தொடக்க கல்வி அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டுள்ளது

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

77. சரியான கூற்று எது?

1. காந்தியடிகள் 1930 மார்ச் 12 இல் தண்டியை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரையை துவங்கினார்
2. ராஜாஜி உப்பு சத்தியாகிரக யாத்திரையை ஏற்பாடு செய்திருந்தார். அது 1930 ஏப்ரல் 13 இல் திருச்சியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தை சென்றடைந்தது
3. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர்
4. 1942 ஆகஸ்ட் 8 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

1. 1,2,3.4 சரி
2. 1,2,3 சரி
3. 2,3,4 சரி
4. 1,3,4 சரி

78. மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (MEPZ) அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எந்த ஆண்டில் நிறுவப்பட்டது?

1. 1975
2. 1984
3. 1990
4. 1993

79. குடியுரிமைச் சட்டம் அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தால் எத்தனை முறை திருத்தப்பட்டுள்ளது?

1. 7
2. 8
3. 9
4. 10

80. கூற்று (1): உச்ச நீதிமன்றம் "அரசியலமைப்பின் பாதுகாவலன்" என அழைக்கப்படுகிறது
கூற்று (2): B.R அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்பு சட்டபிரிவு 32, இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா ஆகும்

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 2 சரி கூற்று 1 தவறு

81. கூற்று (1): நீதிக்கட்சியின் கீழிருந்த சட்டமன்றம் தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921 இல் அங்கீகரித்தது
கூற்று (2): 1926 இல் முத்துலெட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

82. பொருத்துக:

| தொழில்துறை தொகுப்பு | மாவட்டம் |
|---|---|
| A) தோல் | 1. ஈரோடு |
| B) கொதிகலன்கள் மற்றும் விசையாழிகள் | 2. கரூர் |
| C) வாகன கட்டுமானம், விசைத்தறிகள் | 3. மதுரை, வேலூர் |
| D) விசைத்தறி மற்றும் மஞ்சள் | 4. திருச்சி |

1. A-3,B-4,C-2,D-1
2. A-4,B-3,C-2,D-1
3. A-1,B-4,C-3,D-2
4. A-3,B-4,C-1,D-2

83. சரியான கூற்று எது?
1. முதலில் இந்திய அரசியலமைப்பு ஏழு அடிப்படை உரிமைகளை வழங்கியது
2. தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் மட்டுமே உள்ளது
3. இந்திய அரசியலமைப்பின் பகுதி IV இந்தியாவின் மகாசாசனம் என்று அழைக்கப்படுகிறது
4. 1976 இல் 42 ஆவது சட்டதிருத்தம் மூலம் அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவி 31) நீக்கப்பட்டு பகுதி XII பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது

1. 1,2,3,4 சரி
2.1,2,3 சரி
3. 1,2 சரி
4. 1,3,4 சரி

84. கூற்று (1): இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக சிவகாசியை சார்ந்துள்ளது
கூற்று (2): திருப்பூர், நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு
4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

85. எந்த சூழ்நிலையிலும் குடியரசு தலைவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு ... இன் வழங்கப்பட்ட உரிமைகளை தடைசெய்ய முடியாது?

1. 19,20 2. 19,21 3. 20,21 4. 20,32

86. ஒட்டு மொத்த மக்களவை உறுப்பினர்களில் எத்தனை சதவீதம் மட்டுமே அமைச்சரவை உறுப்பினர்களாக (பிரதமர் உட்பட) இருத்தல் வேண்டும் என இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ளது?

1. 10% 2. 15% 3. 20% 4. 25%

87. 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதி உட்பட எத்தனை நீதிபதிகளை உச்ச நீதிமன்றம் கொண்டிருந்தது?

1. 31 2. 28 3. 8 4. 7

88. கூற்று (1): இந்தியாவில் உள்ள மொத்த உயர்நீதிமன்றங்களின் எண்ணிக்கை 25
கூற்று (2): சட்ட மேலவை உருவாக்கம் (அ) நீக்கம் பற்றி சட்டப்பிரிவு 169 விவரிக்கிறது

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
4. இரண்டும் தவறு

89. கூற்று (1): இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி V இல் 79 முதல் 122 வரை உள்ள சட்டப்பிரிவுகள் இந்திய நாடாளுமன்ற அமைப்பு உள்ளடக்கம், ஆயுட்காலம், அலுவலர்கள், செயல்முறைகள் சிறப்பு சலுகைகள், அதிகாரங்கள் பற்றி குறிப்பிடுகிறது
கூற்று (2): இந்திய நாடாளுமன்றம் இரண்டு பகுதிகளைக் கொண்டது

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
3. இரண்டும் தவறு
4. இரண்டும் சரி

90. பொருத்துக:

| | | |
|---|---|---|
| A. மொத்த தேசிய மகிழ்ச்சி | - | 1. சைமன் குஸ்நட் |
| B. மனித மேம்பாட்டு குறியீடு | - | 2. ஜிக்மே சிங்கயே |
| C. GDP யின் நவீன கருத்து | - | 3. முகஹப்-உல்-ஹிக்,அமிர்தியா சென் |
| D. தனி நபர் வருமானம் பற்றி முதலில் கூறியவர் | - | 4. தாதாபாய் நௌரோஜி |

1. A-3,B-4,C-2,D-1
2. A-2,B-3,C-1,D-4
3. A-,B-1,C-2,D-3
4. A-2,B-3,C-4,D-1

91. பொருத்துக:

| | |
|---|---|
| A. விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியாவின் இடம் | 1. 2 |
| B. உலகில் தொழில்துறையில் இந்தியாவின் இடம் | 2. 8 |
| C. உலகில் பணிகள்துறையில் இந்தியாவின் இடம் | 3. 6 |
| D. GVA | 4. GDP+மானியம்-வரிகள் |

1. A-1,B-2,C-3,D-4
2. A-1,B-3,C-2,D-4
3. A-2,B-3,C-1,D-4
4. A-3,B-1,C-2,D-4

92. சரியான கூற்று எது?
1. தேசிய அவசர நிலைக்கான விதி 352
2. போர் (அ) வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பின் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும் பொழுது அது வெளிப்புற அவசர நிலை எனப்படுகிறது
3. ஆயுதமேந்திய கிளர்ச்சிக் காரணமாக அவசர நிலை அறிவிக்கப்படும் போது அது உள்நாட்டு அவசர நிலை எனப்படுகிறது
4.தேசிய அவசரநிலைகள் 1961,1972,1975 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டன

1. 1,2,3,4 சரி 2. 1,2,3 சரி 3. 1,2 சரி 4. 1,3,4 சரி

93. பொருத்துக:

| | |
|---|---|
| A. எவரெஸ்ட் | 1. 8611 மீ |
| B. காட்வின் ஆஸ்டின்(அ) $K_2$ | 2. 8848 மீ |
| C. கஞ்சன் ஜங்கா | 3. 7756 மீ |
| D. காமெட் | 4. 8586 மீ |

1. A-2,B-1,C-4,D-3 2. A-3,B-4,C-2,D-1
3. A-4,B-3,C-2,D-1 4. A-1,B-2,C-3,D-4

94. இவற்றுள் சிந்து நதியின் மிகப் பெரிய துணையாறு?
1. ஜீலம் 2. ராவி 3. பியாஸ் 4. சினாப்

95. கூற்று (1): இந்தியாவின் ஒரே செயல்படும் எரிமலை அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டத்தில் உள்ள பாரன் தீவாகும்
கூற்று (2): அரபிக்கடலில் உள்ள இலட்சத்தீவுகள் முருகைப்பாறைகளால் உருவானவை

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு 2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு கூற்று 2 சரி 4. இரண்டும் தவறு

96. சரியான கூற்று எது?
1. நிகர உள்நாட்டு உற்பத்தி(NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)- தேய்மானம்
2. தலா வருமானம் = நாட்டுவருமானம் / மக்கள்தொகை
3. நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி( GNP)- தேய்மானம்
4. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கிறோம்

1. 1,2,3,4 சரி 2. 1,2,3 சரி 3. 1,3,4 சரி 4. 1,2,4 சரி

97. கூற்று (1): மகாநதி டெல்டாவிற்கு தென் மேற்கே அமைந்துள்ள சிலிகா ஏரி இந்தியாவின் மிகப்பெரிய காயல் ஏரியாகும்
கூற்று(2): கிருஷ்ணா மற்றும் காவேரி ஆற்றிற்கு இடைபட்ட பகுதி சோழமண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது
1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு 2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு 4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

98. பொருத்துக:

A. காரகோரம் கணவாய் - 1. அருணாச்சலப்பிரதேசம்
B. சிப்கிலா கணவாய் - 2. ஜம்மு – காஷ்மீர்
C. ஜெலிப்லா கணவாய் - 3. இமாச்சலபிரதேசம்
D. பொமிடிலா கணவாய் - 4. சிக்கிம்

1. A-2,B-3,C-4,D-1
2. A-4,B-3,C-2,D-1
3. A-3,B-4,C-2,D-1
4. A-1,B-3,C-4,D-2

99. கூற்று (1): இமயமலை உலகிலுள்ள 14 உயரமான சிகரங்களில் 9 சிகரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது

கூற்று (2): தார் பாலைவனம் உலகில் 17 ஆவது மிகப்பெரிய பாலைவனமாகவும் உப அயன மண்டல பாலைவனங்களில் உலக அளவில் 9 ஆவது பெரிய பாலைவனமாக அமைந்துள்ளது

1. 1 மட்டும் சரி 2. இரண்டும் சரி 3. 2 மட்டும் சரி 4.இரண்டும் தவறு

100.சரியான கூற்று எது?

1. 572 தீவுகளை கொண்ட அந்தமான் நிகோபர் தீவுகள் வங்காள விரிகுடாவிலும், 27 தீவுக் கூட்டங்களைக் கொண்ட இலட்சத்தீவுகள் அரபிக் கடலிலும் அமைந்துள்ளன
2. இலட்சத்தீவில் உள்ள மனிதர்கள் வசிக்காத பிட்தீவு பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது
3. தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச எல்லையில் பழவேற்காடு (புலிகாட்) ஏரி அமைந்துள்ளது
4. கோதாவரி ஆற்றுக்கும் கிருஷ்ணா ஆற்றுக்கும் இடையே கொல்லேறு ஏரி அமைந்துள்ளது

1. 1,2,3,4 சரி 2. 1,2,3 சரி 3. 1,3,4 சரி 4. 1,2,4 சரி

101.பொருத்துக:

A. சிந்து நதி - 1. 800 km
B. கங்கை நதி - 2. 2850 km
C. காவேரி - 3. 2525 km
D. தபதி - 4. 724 km

1. A-3,B-4,C-1,D-2
2. A-2,B-3,C-1,D-4
3. A-3,B-1,C-2,D-4
4. A-1,B-2,C-3,D-4

102. சரியான கூற்று எது?

1. கோதாவரி விருத்த கங்கா எனவும் அழைக்கப்படுகிறது
2. வங்க தேசத்தில் கங்கை ஆறு பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது
3. கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப் பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன
4. காவேரி தென்னிந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது

1. 1,2,3,4 சரி 2. 1,2,3 சரி 3. 2,3,4 சரி 4. 1,3,4 சரி

103.புலித்தேவரின் மூன்று முக்கியக் கோட்டைகளான நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகியவை யூசப்கானின் கட்டுப்பாட்டிற்குள் வந்த ஆண்டு?

1. 1761 மே 1
2. 1761, மே 16
3. 1761 மே 15
4. 1761 மே 18

104.வேலுநாச்சியார் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

1. 10
2. 7
3. 8
4. 9

105.சரியான கூற்று எது?

1. கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையானது 1798 ஆம் ஆண்டு வாக்கில் 3310 பகோடாக்களாக இருந்தது
2. 1798 ஆகஸ்ட் 18 இல் தன்னை இராமநாதபுரத்தில் வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஜாக்சன் ஆணை பிறப்பித்தார்
3. இறுதியாக செப்டம்பர் 15, 1798 ஆம் ஆண்டு ஜாக்சன் அனுமதியளித்ததின் பேரில் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனை சந்தித்தார்

1. 1,2,3 சரி
2. 1,2 சரி
3. 1,3 சரி
4. 1 மட்டும்

106.திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், ஆணைமலையின் யதுல் நாயக்கர் போன்ற அருகாமையில் இருந்த பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பை ஏற்படுத்தியவர்?

1. புலித்தேவர்
2. மருதுபாண்டியர்
3. கட்டப்பொம்மன்
4. வேலு நாச்சியார்

107.சரியான இணை எது?

1. யூசுப்கான் தூக்கிலிடப்பட்ட ஆண்டு - 1764
2. சிவசுப்ரமணியனார் தூக்கிலிடப்பட்ட ஆண்டு - 1799, செப்டம்பர் 13
3. மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட ஆண்டு - 1801, அக்டோபர் 24

1. 1,2,3 சரி
2. 1,2 சரி
3. 1,3
4. 2,3

108.யாருடைய கலகம் தென்னிந்திய புரட்சி என்று அழைக்கப்படுவதோடு தமிழக வரலாற்றில் தனித்துவம் பெற்றதாகவும் கருதப்படுகிறது?

1. வேலுநாச்சியார் கலகம்
2. கட்டபொம்மன் கலகம்
3. மருதுசகோதரர்களின் கலகம்
4. இவை அனைத்தும்

109.தீரன்சின்னமலை எப்போது தூக்கிலிடப்பட்டார்?

1. 1805, ஜூலை 31
2. 1801 ஜூலை 31
3. 1805, ஜூன் 31
4. 1805 மே 31

110.கூற்று (1) : 1806 ஜூலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியில் இறங்கினர்

கூற்று (2) : வேலூர் புரட்சியின் போது கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்பு வகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தான் முதல் பலியானார்

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
3. கூற்று 1, 2 தவறு
4. கூற்று 1,2 சரி

111.இந்திய நாட்டில் பிரிட்டிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் அல்லது அரசி என்ற பெருமையை உடையவர்?
1. குயிலி
2. வேலு நாச்சியார்
3. ஜான்சிராணி
4. இராணிமங்கம்மாள்

112.1806 ஆம் ஆண்டு புரட்சியானது வேலூர் கோட்டையுடன் முடிந்துவிடாமல் வேறு எந்த இடங்களில் எல்லாம் எதிரொலித்தது?
1. பெல்லாரி
2. வாலாஜாபாத்
3. ஹைதராபாத்
4. சங்கரிதுர்க்கம்

1. 1,2,3,4 2. 1,2,3 3. 2, மட்டும் 4. 1,3,4

113.வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் எந்த ஆண்டில் காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்?
1. 1921 2. 1931 3. 1924 4. 1920

114.இந்திய அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான இந்திய சட்டபூர்வ ஆணையத்தை நியமிப்பதாக ஆங்கிலேய அரசு எப்போது அறிவித்தது?
1. 1927, நவம்பர் 1
2. 1927, நவம்பர் 8
3. 1928 நவம்பர் 1
4. 1928 நவம்பர் 8

115......... களின் காலம் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் இடையே தொடர்ச்சியான வகுப்பு மோதல்களை கண்ட காலகட்டமாகவே இருந்தது?
1. 1920 2. 1930 3. 1940 4. 1950

116.சைமன் எதிர்ப்பு போராட்டத்தின் போது காவலர்களால் தாக்கப்பட்டதன் விளைவாக உயிரிழந்தவர் யார்?
1. திலகர்
2. சுப்பிரமணிய சிவா
3. அரவிந்த் கோஷ்
4. லாலா லஜபதிராய்

117.ஆங்கிலேயர்கள் எந்த ஆண்டில் முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள்?
1. 1973 2. 1873 3. 1865 4. 1855

118.காந்தி - இர்வின் ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது?
1. 1931, மார்ச் 5
2. 1931, மார்ச் 15
3. 1931 மார்ச் 25
4. 1931 ஏப்ரல் 15

119.காந்தியடிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் போராட்டத்தை எந்த ஆண்டு தொடங்கினார்?
1. 1932, செப்டம்பர் 20
2. 1931 செப்டம்பர் 20
3. 1932 செப்டம்பர் 30
4. 1931 செப்டம்பர் 30

120.ஒரு கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியாக எந்த ஆண்டு கான்பூரில் அகில இந்திய பொதுவுடைமை மாநாடு நடந்தது?

1. 1920  2. 1923  3. 1925  4. 1921

121.காலனி ஆட்சியை ஆயுதக்கிளர்ச்சி மூலம் அகற்றும் நோக்கில் எந்த ஆண்டு இந்துஸ்தான் குடியரசு ராணுவம் கான்பூரில் உருவாக்கப்பட்டது?

1. 1924  2. 1942  3. 1945  4. 1940

122.வினோபா பாவே எப்போது தனி நபர் சத்தியாகிரகத்தை முதன் முதலில் தொடங்கினார்?

1. 1940 செப்டம்பர் 17  2. 1940 அக்டோபர் 17
3. 1940 நவம்பர் 17  4. 1940 டிசம்பர் 17

123.காந்தியடிகள் செய் அல்லது செத்துமடி என்ற முழக்கத்தை எப்போது வெளியிட்டார்?

1. 1942 ஆகஸ்ட் 8  2. 1942 ஆகஸ்ட் 15
3. 1942 ஆகஸ்ட் 9  4. 1942 ஆகஸ்ட் 7

124.இந்திய போர்க்கைதிகளைக் கொண்டு மலாயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களின் ஆதரவோடு இந்திய தேசிய ராணுவத்தை உருவாக்கியவர்?

1. சுபாஷ் சந்திர போஸ்  2. ஜெனரல் மோகன் சிங்
3. கேப்டன் லெட்சுமி செகல்  4. இவை அனைத்தும்

125.வேவல் திட்டம் எப்போது அறிவிக்கப்பட்டது?

1. 1945, ஜூன் 18  2. 1945 ஜூன் 14
3. 1945 ஜூலை 15  4. 1945 ஆகஸ்ட் 15

126.மவுண்ட் பேட்டன் திட்டம் எப்போது அறிவிக்கப்பட்டது?

1. 1945 ஜூன் 3  2. 1946 ஜூலை 3
3. 1947 ஜூன் 3  4. 1947 ஜூலை 3

127.ஜின்னா நேரடி நடவடிக்கை நாளாக அறிவித்த தினம்?

1. 1946 ஆகஸ்ட் 15  2. 1946 ஆகஸ்ட் 16
3. 1946 ஆகஸ்ட் 17  4. 1946 ஆகஸ்ட் 30

128.எப்போது ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின்படி பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்து அனைத்து கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன?

1. 1801 ஜூலை 31  2. 1801 மே 31
3. 1801 ஜூலை 15  4. 1801 ஜூன் 15

129.எப்போது நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார்?

1. 1931 செப்டம்பர் 15  2. 1931 ஆகஸ்ட் 15
3. 1931 செப்டம்பர் 7  4. 1931 ஆகஸ்ட் 7

130. நேரு தலைமையில் இடைக்கால அரசு 1946 செப்டம்பரில் அமைக்கப்பட்டது இந்த இடைகால அரசில் முஸ்லீம் லீக் எப்போது இணைந்தது?

1. 1946 அக்டோபர்
2. 1946 செப்டம்பர்
3. 1946 நவம்பர்
4. 1946 டிசம்பர்

131. T. முத்துசாமி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக எப்போது நியமிக்கப்பட்டார்?

1. 1890
2. 1867
3. 1877
4. 1887

132. 1884 மே 16 இல் வீரராகவாச்சாரி , P அனந்தச்சார்லு , P. இரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட சென்னை மகாஜன சபையின் முதல் தலைவராக பொறுப்பேற்றவர்?

1. P. இரங்கையா
2. P.அனந்தச்சார்லு
3. நரசு செட்டி
4. வீரராகவாச்சாரி

133. சரியான கூற்று எது?

1. தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப் பெற்ற தொடக்க கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும்
2. தென்னிந்தியாவில் தொடங்க பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பு சென்னை வாசிகள் சங்கம்
3. தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக தொழிலாளன் என்ற பத்திரிக்கையை சிங்காரவேலர் வெளியிட்டார்

1. 1,2,3 சரி
2. 1,2 சரி
3. 1,3 சரி
4. 2,3 சரி

134. சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்ட மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர்?

1. எம்.சி.ராஜா
2. T. முத்துசாமி
3. சிங்கார வேலர்
4. முத்துலெட்சுமி ரெட்டி

135. பொருத்துக:

| | |
|---|---|
| அ. குடியரசு | 1. 1928 |
| ஆ. ரிவோல்ட் | 2. 1925 |
| இ. புரட்சி | 3. 1935 |
| ஈ. பகுத்தறிவு | 4. 1933 |
| உ. விடுதலை | 5. 1934 |

1. அ-2, ஆ-1,இ-4, ஈ-3, உ-5
2. அ-3,ஆ-1,இ-4,ஈ-2,உ-5
3. அ-2,ஆ-1,இ-4,ஈ-5,உ-3
4. அ-2,ஆ-1,இ-5,ஈ-4,உ-3

136. சரியான இணை எது?

1. சென்னை வாசிகள் சங்கம் - 1852
2. சென்னை மகாஜன சபை - 1884
3. பிராத்தன சமாஜம் - 1867
4. பிரம்ம சமாஜம் - 1828

1. 1,2,3,4 சரி
2. 1,2,3 சரி
3. 1,2,4 சரி
4. 2,3,4 சரி

137.1875 இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட பிரம்ம ஞான சபை பின்னர் எந்த ஆண்டில் இந்தியாவில் சென்னை அடையாருக்கு மாற்றப்பட்டது?

1. 1893 2. 1876 3. 1886 4. 1885

138.பின்வரும் கூற்றுகளில் ஜோதிபாபூலே பற்றி சரியான கூற்று எது?

1. இவர் பிராமண எதிர்பியக்கத்தின் தொடக்ககால தலைவரென்றே அறியப்படுகிறார்
2. 1854இல் ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புனேவில் திறந்தார்
3. குலாம்கிரி என்ற நூலை எழுதினார்
4. சத்திய சோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம்) எனும் அமைப்பை ,பிராமணரல்லாத மக்களும் சுயமரியாதையோடும் , குறிக்கோளோடும் வாழத்தூண்டுவதற்காய் நிறுவினார்

1. 1,2,3,4 சரி 2. 1,3,4 சரி 3. 2,3,4 சரி 4. 2,3 சரி

139.1907 இல் சாது ஜன பரிபாலன சங்கம் எனும் அமைப்பை நிறுவியவர்?

1. நாராயண குரு 2. அய்யன்காளி
3. அலிகார் 4. ஜோதிபாபூலே

140.சர் சையத் அகமத்கான் எந்த ஆண்டில் அலிகார் நகரில் அலிகார் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியை நிறுவினார்?

1. 1875 2. 1886 3. 1885 4. 1867

141.எந்த ஆண்டில் அலிகார் முகமதிய ஆங்கிலோ- ஓரியண்டல் கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு பல்கலைக்கழகமானது?

1. 1925 2. 1920 3. 1950 4. 1918

142.பல்வேறு சாதிகளை சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதற்காக சமத்துவ சமாஜம் எனும் அமைப்பை நிறுவியவர்?

1. அயோத்தி தாச பண்டிதர் 2. அம்பேத்கர்
3. வைகுண்டசுவாமிகள் 4. நாராயண குரு

143.1891 இல் திராவிட மகாஜன சபை என்ற அமைப்பை அயோத்தி தாசர் நிறுவி அவ்வமைப்பின் முதல் மாநாட்டை எங்கு நடத்தினார்?

1. நீலகிரி 2. சேலம் 3. மதுரை 4. கோவை

144.கூற்று (1): இந்தியா அதிகபட்சமாக வங்காள தேசத்துடன் 4156 km நீளமுள்ள நில எல்லையையும் குறுகிய எல்லையாக ஆப்கானிஸ்தானுடன் 106 km நில எல்லையையும் கொண்டுள்ளது

கூற்று (2): இந்தியா 15200 km நில எல்லைகளை கொண்டுள்ளது

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு 2. இரண்டும் சரி
3. இரண்டும் தவறு 4. கூற்று 1 தவறு கூற்று 2 சரி

145.இந்தியாவின் திட்ட நேரமானது கிரின்விச் சராசரி நேரத்தை விட …… முன்னதாக உள்ளது?

1. 5 மணி, 45 நிமிடம் 2. 5 மணி, 15 நிமிடம்
3. 5 மணி, 30 நிமிடம் 4. 5 மணி, 25 நிமிடம்

146.பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. ஒரு பைசா தமிழன் | - | 1. 1885 |
| ஆ. திராவிட பாண்டியன் | - | 2. 1860 |
| இ. ஆரிய சமாஜம் | - | 3. 1907 |
| ஈ. முதல் முறை திருமண வயது சட்டம் | - | 4. 1875 |

1. அ-2,ஆ-1,இ-4,ஈ-3
2. அ-3,ஆ-1,இ-4,ஈ-2
3. அ-3,ஆ-2,இ-4,ஈ-1
4. அ-1,ஆ-3,இ-4,ஈ-2

147.மேற்கில் உள்ள குஜராத் முதல் கிழக்கில் உள்ள அருணாச்சலபிரதேசம் வரை இந்தியா ஏறத்தாழ எத்தனை தீர்க்கக் கோடுகளை கொண்டுள்ளது?

1. 28 2. 25 3. 30 4. 40

148.பாக்கிஸ்தானையும், ஆப்கானிஸ்தானையும் இணைப்பது?

1. கைபர் கணவாய் 2. பாக் நீர் சந்தி
3. காரகோரம் கணவாய் 4. ஏதுமில்லை

149.இலட்ச்சத்தீவு , மினிக்காய் மற்றும் அமினித் தீவுகூட்டங்கள் எந்த ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது?

1. 1975 2. 1973 3. 1974 4. 1970

150.இந்திய அரசியலமைப்பில் அலுவலக மொழிகள் பற்றி விவரிப்பது?

1. பகுதி XVII சட்டப்பிரிவு 343 லிருந்து 351 வரை
2. பகுதி XV சட்டப்பிரிவு 343 லிருந்து 351 வரை
3. பகுதி XVIII சட்டப்பிரிவு 343 லிருந்து 351 வரை
4. பகுதி X சட்டப்பிரிவு 343 லிருந்து 351 வரை

151.சரியான கூற்று எது?

1. இந்தியாவின் நிலப்பரப்பு 32,87,263 ச,கி,மீ ஆகும். இது புவியில் மொத்த பரப்பளவில் 2.4 சதவீதமாகும்
2. இந்திய கடற்கரையின் மொத்த நீளம் மற்றும் தீவு கூட்டங்களையும் சேர்த்து 7516.6 கி.மீ ஆகும்
3. இந்தியா தெற்கில் இந்தியப் பெருங்கடலாலும், கிழக்கில் வங்காள விரிகுடாவாலும் , மேற்கே அரபிக் கடலாலும் சூழப்பட்டு சுமார் 6100 Km நீளமுள்ள நீண்ட கடற்கரைப் பகுதியை மூன்று பக்கங்களில் கொண்டுள்ளது

1. 1,2,3 சரி 2. 1,2 சரி 3. 1,3 சரி 4. 2,3 சரி

152.இந்தியாவில் முதன் முறையாக எந்த ஆண்டு எங்கு குடியரசு தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது?

1. 1951, கேரளா 2. 1952 , கேரளா
3. 1951, பஞ்சாப் 4. 1952, பஞ்சாப்

153.தொடக்கத்தில் எத்தனை மொழிகள் அரசியலமைப்பின் 8 ஆவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன?

1. 22 2. 16 3. 14 4. 12

154.இவற்றுள் செம்மொழி அந்தஸ்து பெறாத மொழி எது?

1. தமிழ் (2004) 2. சமஸ்கிருதம் (2005)
3. மலையாளம் (2013) 4. ஹிந்தி (2008)

155.அரசியலமைப்பின் 368 ஆவது சட்டப் பிரிவு எத்தனை வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது?

1. 1 2. 2 3. 3 4. 4

156.கூற்று (1) : ஒடுக்கப்பட்டோரின் கோவில் நுழைவுக்கு ஆதரவாக குரல் எழுப்புவதற்காக பண்டிதர் அயோத்திதாசர் அத்வைதானந்தா சபா என்ற அமைப்பை நிறுவினார்
கூற்று (2): 1882 இல் அயோத்தி தாசரும் ஜான் திரவியம் என்பவரும் திராவிடர்க் கழகம் எனும் அமைப்பை நிறுவினர்

1. கூற்று 1 சரி கூற்று 2 தவறு 2. கூற்று 1 தவறு கூற்று 2 சரி
3. இரண்டும் சரி 4. இரண்டும் தவறு

157.பொருத்துக:

அ. இந்தியாவிற்கு மேற்கில் - 1. வங்காளதேசம்
ஆ. இந்தியாவிற்கு வட மேற்கு - 2. பாக்கிஸ்தான்
இ. இந்தியாவிற்கு வடக்கில் - 3. ஆப்கானிஸ்தான்
ஈ. இந்தியாவிற்கு கிழக்கில் - 4. சீனா

1. அ-2,ஆ-3,இ-1,ஈ-4 2. அ-2,ஆ-3,இ-4,ஈ-1
3. அ-3,ஆ-2,இ-4,ஈ-1 4. அ-4,ஆ-3,இ-2,ஈ-1

158.அரசியலமைப்பு செயல்பாடு குறித்து ஆய்வு செய்ய எந்த ஆண்டில் இந்திய அரசு ஒரு தீர்மானத்தின் படி M.N வெங்கடாசலய்யா தலைமையில் அரசியலமைப்பு சட்ட செயல்பாட்டிற்கான தேசிய சீராய்வு ஆணையம் ஒன்றை அமைத்தது?

1. 2000 2. 2001 3. 2007 4. 2005

159.எந்த ஆண்டில் மத்திய- மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு Dr. P.V இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது?

1. 1960 2. 1969 3. 1979 4. 1998

160.அயோத்தி தாசர் 1907 இல் ஒரு பைசா தமிழன் என்ற பெயரில் ஒரு வாராந்திரப் பத்திரிக்கையை தொடங்கி அதை எந்த ஆண்டு வரை தொடர்ந்து வெளியிட்டார்?

1. 1914 2. 1915 3. 1916 4. 1918

161.சரியான இணை எது?

1. மத்திய அரசு பட்டியல் - 1. 100 துறைகள்
2. மாநில அரசு பட்டியல் - 2. 61 துறைகள்
3. பொதுப்பட்டியல் - 3. 52 துறைகள்

1. 1,2,3 சரி 2. 1,3 சரி 3. 2,3 சரி 4. 1,2 சரி

162.அரசியலமைப்பின் சட்டப்பிரிவு ….. இன்படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கையும் குடியரசு தலைவரின் பெயராலே மேற்கொள்ளப்பட வேண்டும்?

1. 72  2. 75  3. 77  4. 76

163.மத்திய பாதுகாப்பு படையின் தலைமைத் தளபதி என்ற அதிகாரத்தை எந்த சட்டப்பிரிவு குடியரசு தலைவருக்கு வழங்கியுள்ளது?

1. 53(2)  2. 53(1)  3. 52(2)  4. 52(1)

164.அணிசேரா இயக்கம் என்ற சொல் 1953 இல் ஐ .நா சபையில் உரையாற்றிய ….. என்பவரால் உருவாக்கப்பட்டது?

1. நேரு  2. விவேகானந்தர்
3. நெல்சன் மண்டேலா  4. வி.கிருஷ்ண மேனன்

165.பஞ்சசீலம் என்ற கொள்கை எப்போது கையெழுத்தானது?

1. 1953, ஏப்ரல் 28  2. 1954 ஏப்ரல் 28
3. 1953 ஏப்ரல் 18  4. 1954 ஏப்ரல் 18

166.பொருத்துக:

அ. முதலாவது மொழி குழு - 1. 1983
ஆ. அலுவலக மொழி சட்டம் - 2. 360
இ. சர்க்காரியா குழு - 3. 1955
ஈ. நிதி சார்ந்த அவசர நிலை - 4. 1963

1. அ-1,ஆ-4,இ-3,ஈ-2  2. அ-3,ஆ-1,இ-4,ஈ-2
3. அ-3,ஆ-4,இ-1,ஈ-2  4. அ-4,ஆ-3,இ-1,ஈ-2

167.சீனா 1964 ஆம் ஆண்டு லாப் நார் என்னுமிடத்தில் மேற்கொண்ட அணு சோதனைக்கு பதிலடியாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தினை எப்போது நடத்தியது?

1. 1964  2. 1997  3. 1974  4. 1994

168.இந்தியாவிற்கு சொந்தமான டீன்பிகா என்ற பகுதி எங்கு அமைந்துள்ளது?

1. மேற்கு வங்காளம் மற்றும் வங்கதேசத்திற்கு இடையான எல்லையில்
2. காஷ்மீர் மற்றும் பாக்கிஸ்தான் இடையிலான எல்லையில்
3. காஷ்மீர் மற்றும் சீனா இடையிலான எல்லையில்
4. குஜராத் மற்றும் பாக்கிஸ்தான் இடையிலான எல்லையில்

169.இந்தியாவின் எத்தனை மாநிலங்கள் நேபாள எல்லையை பகிர்ந்து கொள்கின்றன?

1. 4  2. 5  3. 6  4. 4

170.தமிழ் நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில் சுமார் எத்தனை சதவீதம் கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன?

1. 90%  2. 94%  3. 97%  4. 85%

171.புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுதிட்டம் எந்த ஆண்டு முதல் கர்ப்பிணி பெண்களுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

1. 1982 2. 1985 3. 1995 4. 1990

172.விவசாய பொருட்களின் ஏற்றுமதி அடிப்படையில் புதிய வேளாண் கொள்கை மத்திய அரசால் எப்போது அறிவிக்கப்பட்டது?

1. 2015 2. 2016 3. 2017 4. 2018

173.இந்தியாவில் முதன் முதலாக வருமான வரி எந்த ஆண்டு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

1. 1860 சர் ஜேம்ஸ் வில்சன் 2. 1860, ஜேம்ஸ் வில்லியம்ஸ்
3. 1865 சர் ஜேம்ஸ் வில்சன் 4. 1865 ஜேம்ஸ் வில்லியம்ஸ்

174.GST வரி தொடர்பான சட்டம் எப்போது இந்திய பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது?

1. மார்ச் 29,2017 2. ஜூலை 1,2017
3. ஏப்ரல் 29,2019 4. மே 29,2017

175.GST வரி எப்போது அமல்படுத்தப்பட்டது?

1. ஜூலை 1, 2015 2. ஜூலை 1, 2017
3. ஜூலை 1,2016 4. ஜூலை 1, 2018

176.எந்த ஆண்டில் எஃகு உற்பத்தி செய்வதற்காக சேலத்தில் இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்டது?

1. 1975 2. 1985 3. 1973 4. 1983

177.இந்தியாவில் ஏழை மக்களின் பசு என்று அழைக்கப்படுவது?

1. செம்மரி ஆடு 2. வெள்ளாடு
3. எருமைமாடு 4. கழுதை

178.தமிழ் நாட்டின் மிக அதிக மழைப்பெறும் பகுதியான சின்னக்கல்லார் இந்தியாவின் எத்தனையாவது அதிக மழை பெறும் பகுதியாக உள்ளது?

1. 1 2. 2 3. 3 4. 4

179.இந்தியப் பெண்கள் சங்கம் என்பது எந்த ஆண்டில் அன்னிபெசன்ட் , மார்கரெட் கசின்ஸ் ஆகியோரால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப் பெற்றது?

1. 1917 2. 1850 3.1927 4. 1916

180.தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க எந்த ஆண்டில் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது?

1. 1945 2. 1943 3. 1948 4. 1965

181.ஒரு முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் எப்போது நிறுவப்பட்டது?

1. 1708 2. 1709 3. 1710 4. 1711

182.வகுப்பு வாரி ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு எப்போது அறிவித்தார்?

1. 1932, ஆகஸ்ட் 16
2. 1932 ஆகஸ்ட் 15
3. 1932 ஆகஸ்ட் 17
4. 1932 ஆகஸ்ட் 14

183.கூற்று (1) :1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் முதலாவது வட்ட மேசை மாநாடு நடந்தது

கூற்று (2): 1930 மார்ச் 12 ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ் பெற்ற தண்டியாத்திரையை காந்தியடிகள் தொடங்கினார்

1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
2. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
3. இரண்டும் சரி
4. இரண்டும் தவறு

184.காந்தியடிகள் ரௌலட் சட்டத்தை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக்கு எப்போது அழைப்பு விடுத்தார்?

1. 1919 ஏப்ரல் 6
2. 1919 ஏப்ரல் 11
3. 1919 ஏப்ரல் 13
4. 1919 ஏப்ரல் 10

185.1916 ஆண்டு எந்த மாதத்தில் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார்?

1. செப்டம்பர்
2. டிசம்பர்
3. ஏப்ரல்
4. மே

186.உலகிலேயே உயரமான எல்லைப்புறச் சாலை லடாக்கில் உள்ள .... இருந்து.... வரை அமைக்கப்பட்டுள்ளது?

1. லேவில்,சண்டிகர்
2. லேவில், குஜராத்
3. லேவில், காஷ்மீர்
4. ஏதுமில்லை

187.பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) தேசிய நெடுஞ்சாலை ஆணையம் | - | 1. 1983 |
| ஆ) மத்திய பட்டு ஆராய்ச்சி தொழில் நுட்ப நிறுவனம் | - | 2. 1998 |
| இ) தேசிய காற்றாற்றல் நிறுவனம் | - | 3. 1919 |
| ஈ) இந்தியாவின் முதல் கால் நடை கணக்கெடுப்பு | - | 4. 1995 |

1. அ-4,ஆ-1,இ-2,ஈ-3
2. அ-3.ஆ-4,இ-2,ஈ-1
3. அ-2,ஆ-1,இ-4,ஈ-3
4. அ-1,ஆ-4,இ-2,ஈ-3

188.பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) வெள்ளி புரட்சி | - | 1. முட்டை மற்றும் கோழிகள் உற்பத்தி |
| ஆ) வெள்ளி இழைப் புரட்சி | - | 2. பருத்தி உற்பத்தி |
| இ) பொன் புரட்சி | - | 3. பழங்கள்,தேன், மற்றும் தோட்டக்கலை பயிர் |
| ஈ) இளஞ்சிவப்பு புரட்சி | - | 4. வெங்காயம் இறால் உற்பத்தி |

1. அ-1,ஆ-2,இ-3,ஈ-4
2. அ-2,ஆ-1,இ-4,ஈ-3
3. அ-2,ஆ-1,இ-3,ஈ-4
4. அ-1,ஆ-2,இ-4,ஈ-3

189.தாமிரப் படிவு அதிகமுள்ள மாநிலம்?
1. இராஜஸ்தான்
2. ஜார்காண்ட்
3. மத்தியப்பிரதேசம்
4. தமிழ் நாடு

190.NALCO என்று அழைக்கப்படும் தேசிய அலுமினிய நிறுவனம் இந்திய சுரங்கத்துறை அமைச்சகத்தின் கீழ் பொதுத்துறை நிறுவனமாக எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?
1. 1991
2. 1981
3. 1983
4. 1985

191.இந்தியா உலக அளவில் அதிக காற்றாலைத் திறன் கொண்ட நாடுகளில் எத்தனையாவது இடத்தில் உள்ளது?
1. 1
2. 2
3. 3
4. 4

192.இந்தியாவின் முதல் பருத்தி நெசவாலை எந்த ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள போர்ட் க்ளாஸ்டர் என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது?
1. 1818
2. 1828
3. 1918
4. 1928

193.இந்தியாவின் முதல் சணல் ஆலை ஜார்ஜ் ஆக்லாண்டு என்பவரால் எப்போது கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள “ரிஷ்ரா” என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது?
1. 1854
2. 1818
3. 1824
4. 1850

194.இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை எந்த ஆண்டில் மேற்கு வங்கத்தில் உள்ள செராம்பூர் என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது?
1. 1854
2. 1818
3. 1812
4. 1815

195.இந்தியாவின் முதல் மென்பொருள் தொழிலகம்?
1. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்
2. எல்.& .டி
3. இன்போடெக்
4. அசெஞ்சர்

196.கூற்று (1) மேகாலயா மாநிலத்தில் இரயில் போக்குவரத்து இல்லை
கூற்று (2): இந்தியாவில் 8 பெரு நகரங்களில் மெட்ரோ இரயில் சேவை வழங்கப்படுகிறது
1. இரண்டும் தவறு
2. இரண்டும் சரி
3. கூற்று 1 தவறு 2 சரி
4. கூற்று 1 சரி 2 தவறு

197.பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் | - | 1. கொச்சி |
| ஆ. கார்டன் ரீச் கப்பல் கட்டும் தொழிற்சாலை | - | 2. மும்பை |
| இ. மசாகான் கப்பல் கட்டும் தொழிற்சாலை | - | 3. கொல்கத்தா |
| ஈ. கொச்சி கப்பல் கட்டும் தளம் | - | 4. விசாகப்பட்டினம் |

1. அ-4,ஆ-3,இ-2,ஈ-1
2. அ-4,ஆ-2,இ-3,ஈ-1
3. அ-4,ஆ-1,இ-2,ஈ-3
4. அ-4,ஆ-3,இ-1,ஈ-2

198. கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிகபட்சமாக எத்தனை முறை குடியரசு தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?
1. 8
2. 9
3. 10
4. 12

199. சரியான கூற்று எது?

1. கங்கை ஆறு உத்ரகாண்ட் மாநிலத்தில் உள்ள உத்தர் காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி பனியாற்றிலிருந்து பாகிரதி என்னும் பெயருடன் உற்பத்தியாகிறது

2. தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறான(1465 கி.மீ) கோதாவரி, மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது

3. இந்தியாவின் வடிகாலமைப்பு வட இந்திய ஆறுகள் (இமயமலை ஆறுகள்) மற்றும் தீபகற்ப ஆறுகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன

1. 1,2,3 சரி 2. 1,3 சரி 3. 2,3 சரி 4. 1,2 சரி

200.கூற்று (1): இந்தியாவில் கால நிலையை பாதிக்கும் மிக முக்கிய காரணி பருவக் காற்றாகும்

கூற்று (2): வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகளை ஜெட் காற்றுகள் என்கிறோம்

1. கூற்று 1 சரி ,கூற்று 2 தவறு
2. இரண்டும் சரி
3. கூற்று 2 சரி, கூற்று 1 தவறு
4. இரண்டும் தவறு

**இந்த தேர்வில் சேர முடியாதவர்களுகம் தினமும் தேர்வு எழுதிபார்க்கும் வண்ணம் JEBA TNPSC YOUTUBE CHANNEL இல் இந்த அட்டவணை படி 50 கேள்விகள் கொண்ட தேர்வு பதிவிடப்படும்.. இலவச தேர்விற்கு JEBA TNPSC YOUTUBE CHANNEL ஐ SUBSCRIBE பண்ணவும்..**

- இந்த வினாத்தாளில் 10 ஆம் வகுப்பு புதிய சமுக அறிவியல் புத்தகத்தில் உள்ள முக்கிய POINTS இல் 30 சதவீதம் கொடுக்கப்பட்டுள்ளது.. மேலும் இதேபோல் ஒரு தேர்வு ஜுன் மாதத்தில் கொடுக்கப்படும்..

- பள்ளி புத்தகத்தை நன்றாக படித்துவிட்டு இந்த தேர்வை எழுதிபார்க்கவும்.. பள்ளி புத்தகங்களை நன்றாக படிக்காமல் எந்த ஒரு தேர்விலும் வெற்றி பெற இயலாது என்பதை உணர்ந்து படியுங்கள்..

- இந்த TEST BATCH இல் சேர விரும்புபவர்கள் Whats app : 6382770332 இந்த எண்ணில் தொடர்புகொள்ளவும்

- **தேர்வு கட்டணம் : 300 ரூபாய்**

# TEST SCHEDULE JEBA TNPSC YOUTUBE CHANNEL

| | | |
|---|---|---|
| April 11 | 10 ஆம் வகுப்பு புதிய சமூக அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| April 12 | முந்தைய ஆண்டு அரசியலமைப்பு வினாக்கள் தேர்வு | 200 கேள்விகள் |
| April 15 | 10 ஆம் வகுப்பு புதிய அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| April 18 | 9 ஆம் வகுப்பு புதிய சமூக அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| **April 19** | முந்தைய ஆண்டு வரலாறு வினாக்கள் தேர்வு | 200 கேள்விகள் |
| April 22 | 9 ஆம் வகுப்பு புதிய அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| April 25 | 8 ஆம் வகுப்பு புதிய சமூக அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| **April 26** | முந்தைய ஆண்டு அறிவியல் வினாக்கள் தேர்வு | 200 கேள்விகள் |
| April 29 | 8 ஆம் வகுப்பு புதிய அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| **May 2** | 6 & 7 வகுப்பு புதிய சமூக அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| May 3 | முந்தைய ஆண்டு புவியியல் வினாக்கள் தேர்வு | 200 கேள்விகள் |
| May 6 | 6 & 7 ஆம் வகுப்பு புதிய அறிவியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| **May 10** | முந்தைய ஆண்டு பொருளாதார வினாக்கள் தேர்வு | 200 கேள்விகள் |
| May 15 | 11 ஆம் வகுப்பு வரலாறு புத்தகத் தேர்வு | 200 கேள்விகள் |
| **May 20** | 12 ஆம் வகுப்பு வரலாறு புத்தகத் தேர்வு | 200 கேள்விகள் |
| **May 25** | 11 ஆம் வகுப்பு அரசியலமைப்பு தேர்வு | 100 கேள்விகள் |

# TEST SCHEDULE JEBA TNPSC YOUTUBE CHANNEL

| | | |
|---|---|---|
| May 30 | 12 ஆம் வகுப்பு அரசியலமைப்பு தேர்வு | 200 கேள்விகள் |
| June 3 | 11 ஆம் வகுப்பு பொருளாதார தேர்வு | 200 கேள்விகள் |
| June 10 | 12 ஆம் வகுப்பு பொருளாதார தேர்வு | 200 கேள்விகள் |
| June 15 | 11 & 12 ஆம் வகுப்பு புவியியல் புத்தக தேர்வு | 200 கேள்விகள் |
| | 10 ஆம் வகுப்பு சமூக அறிவியல் + அறிவியல் தேர்வு | 200 கேள்விகள் |
| | 9 ஆம் வகுப்பு சமூக அறிவியல் + அறிவியல் தேர்வு | 200 கேள்விகள் |
| | 8ஆம் வகுப்பு சமூக அறிவியல் + அறிவியல் தேர்வு | 200 கேள்விகள் |
| | 6&7 ஆம் வகுப்பு சமூக அறிவியல் + அறிவியல் தேர்வு | 200 கேள்விகள் |
| | | |

- குறிப்பு: இது தற்காலிக அட்டவணை மட்டுமே இதில் நடப்பு நிகழ்வுகள் தேர்வுகள் மற்றும் சில தேர்வுகளுக்கான தேதி பின்னர் UPDATE செய்யப்படும்.. (தேர்வுகளை விரைவாக நடத்த முயற்சி செய்யப்படும்)

- இந்த தேர்வுகளில் புதிய சமச்சீர் கல்வி புத்தகத்தில் உள்ள 70 சதவீத முக்கிய POINTS COVER செய்யப்படும்..

- TNPSC, PC, TNEB ASSESSOR, LAB ASSISTANT போன்ற தேர்வுகளுக்கு தயாராகுபவர்கள் இதில் இணைந்து பயன்பெறலாம்..

- இந்த தேர்வுகளில் உள்ள மொத்த வினாக்கள் 5000 வினாக்கள்

- தேர்வு இணைய கட்டணம் : 300 ( April 10 ற்குள் சேரும் நபர்கள் 250 ரூபாய் செலுத்தினால் போதும்)

# TEST SCHEDULE JEBA TNPSC YOUTUBE CHANNEL

- **இதில் இணைய விரும்புவோர் Whats app : 6382770332 இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்**
- **SAMPLE TEST ற்கு இங்கே அழுத்தவும்**
- **இதில் கொடுக்கப்பட்டுள்ள முந்தைய ஆண்டு தேர்வு வினாக்களுக்கு மட்டு, TNPSC ஆல் வெளியிடப்பட்ட விடைகளின் அடிப்படையில் தான் விடை கொடுக்கப்படும்**
- **குறிப்பு: இனையாதவர்களும் பயன்பெரும் வகையில் இந்த SCHEDULE படி 50 கேள்விகள் கொண்ட தேர்வு JEBA TNPSC YOUTUBE CHANNEL இல் பதிவேற்றம் செய்யப்படும்.. இந்த சேனலை SUBSCRIBE செய்து பயன்படுத்திகொள்ளுங்கள்**